1968 ஆகஸ்ட் 31]

திரு டி. மார்டின் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய பேச்சு பேரவை நடவடிக்கைக் குறிப்பில் அச்சேறும். இன்றுதான் இந்தக் கூட்டத்தொடரின் இறுதி நாள், ஆகவே முதல் அமைச்சர் அவர்கள் எப்போது அதைப்பற்றிச் சொல்லப்போகிருரோ அதுவரை இப்போது அவர் பேசியிருப்பதும் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் ஏறுதிருக்கத் தாங்கள் உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கனம் உறுப்பினர் வழக் கறிஞர். இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. வேண்டுகோள். "அப்படிக் கூறவில்லை என்று சொன்னால் நான் திரும்பப் பெறுகிறேன்" என்றும் முதல் அமைச்சர் சொல்லியிருக்கிருர். அதுவும் இந்தக் குறிப்பில் வரும்.

திரு. கோ. பூவராகன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் பட்ஜெட் கூட்டத்தொடரிலேயே இரண்டு உரிமைப் பிரச்சினைகள் கொடுத்திருக் கிறேன். ஒன்று ஹரிஜன நல இலாக்கா மீதும், மற்றொன்று பொதுப் பணித்துறை அமைச்சர், முதல் அமைச்சர் மீதும் கொடுத்திருந்தேன். எனக்கு ஒன்று பற்றிதான் தகவல் வந்தது. அவை எந்த அளவில் இருக்கின்றன என்பதற்குத் தாங்கள் தீர்ப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பூவராகன் அவர்கள் கொடுத்த பிரச்சினை ஆய்வில் இருக்கிறது. பிறகு அதை எடுத்துக் கொள்கிறேன்.

6. ஒற்றி வைப்புத் தீர்மானம்

திண்டுக்கல் நகராட்சியின் குடிநீர் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திண்டுக்கல் நகர்ப்பகுதியில் இருக்கும் குடிதண்ணீர்க் கஷ்டத்தைப்பற்றி திரு. வரதராஜன் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிருர்கள். அது எப்படி அரசினருடைய அன்றாட நிகழ்ச்சிக்கு அப்பாற்பட்டது என்பதற்குச் சிறு விளக்கம் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு என். வரதராஜன் : தலைவர் அவர்களே, ஒரு கோடி ரூபாய் செலவு செய்து திண்டுக்கல் காமராஜ் நீர்த் தேக்கம் கட்டப்பட்டது. அதன் மூலம் திண்டுக்கல், சின்னாளப்பட்டி. ஆத்தூர் போன்ற பல்வேறு நகரங்களுக்கும் தண்ணீர் சப்ளை செய்யும்படியான அந்தத் திட்டத்தை ஒரு கோடி ரூபாய் செலவுசெய்து கட்டியும், அதில் தண்ணீர் வரமுடியாதபடி. தடுப்புச் சுவர் எழுப்பிவிட்டார்கள். அதனால் தண்ணீர் வராது நின்றுவிட்டது. அந்தப் பகுதி மக்கள் தண்ணீருக்காக இன்று மிகவும் கஷ்டப்படுகிருர்கள். ஆகவே இது மிகவும் முக்கியமான பிரச்சினை. உடனடியாகக் கவனிக்கவேண்டிய பிரச்சினை. ஆகவே, அவசரமாக விவாதித்து அந்தத் தடுப்புச் சுவர்களை நீக்கிவிடுவதுபற்றி விவாதிக்க இந்தச் சபையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்கக் கோரி என் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தற்பொழுது நிலவி வரும் வெப்ப நிலையிலும் மழையின்மையாலும் திண்டுக்கல் நகராட்சியில் குடிதண்ணீர் வழங்குவதில் சில கஷ்டங்கள் உணரப்படு கின்றன. குடிநீர்த் தேக்கத்தில் உள்ள தண்ணீர் 15 நாட்களுக்கு மாத்தி ரமே வழங்கப்போதுமானதாக இருக்கிறது. இன்னும் அதிக நாட்கள் தண்ணீர் வழங்குவதின்பொருட்டு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நரசிங்காபுரம் குளத்திற்குப் போகும் வரத்துக்காலிலிருந்து தண்ணீரை குடிநீர் தேக்கத்திற்குத் திருப்பிவிட ஏற்பாடுகள் செய்துள்ளார். இந்தக் குளத்தில் ஆயக்கட்டிற்கு இப்பொழுது பாசனத்தேவை ஏற்பட வில்லை. இப்படித் திருப்பப்பட்ட தண்ணீரைக்கொண்டு திண்டுக்கல் நகராட்சி யில் குடிநீர் வழங்குவதில் ஏற்பட்டுள்ள உடனடிக் கஷ்டங்களைத் தவிர்க்க இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. காமராஜ் நகர் நீர்த் தேக்கத்திற்கு வரும் வரத்துக்காலில் உள்ள கட்டுமானங்களுக்கு என்னென்ன சீரமைப்புகள் தேவை என்பதையும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்ந்து

வருகிறார். ஆகவே இந்தப் பிரச்சினை இப்போது அரசினரின் கவனத்திலேயும் பொறியாளரின் தீவிர கவனத்திலேயும் இருந்து வருகிற காரணத்தினால் இதற்கு அவையின் பிற அலுவல்களின் ஒத்திவைப்புத்தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்தின் காரணத்தினால் இந்த ஒத்திவைப்புப் பிரேரணைக்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

7. அரசினர் தீர்மானம்

விதி 41 (3)ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத்தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின 41 (3) விதியின் கீழ்" ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக்கூடாது" என்று உள்ள தடையை இன்று தளர்த்தவேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

8. கவன ஈர்ப்பு

(i) கோவை மாவட்டத்தில் குடிநீர் கிடைக்காமை.

திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின் கீழ்,

கோவை மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டு காலமாக மழை தவறிப் போய்விட்டமையால் பொது மக்கள் குறிப்பாக கிராமப்புறத்தில் குடியிருக்கும் மக்கள் குடிதண்ணீர் கிடைக்காமல் துன்பப்படும் நிலை பற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

***மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த இரண்டாண்டுகளுக்கு மேல் கோவை மாவட்டத்தில் பருவமழை தவறியது குறித்து அவ்வப்போது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இதன் விளைவாக மாவட்டம் முழுவதிலும் நிலத்திற்கடியிலுள்ள நீர் மட்டம் கணிசமான அளவுக்குக் கீழே சென்றுவிட்டது. குடிநீர்க் கிணறுகள் பலவும் வற்றிவிட்டனவென்றும் அறிவிக்கப்பட்டது. எனவே, இக் கிணறுகள் பலவற்றை ஆழப்படுத்த வேண்டியிருந்ததால் 1967–68-ஆம் ஆண்டில் அரசாங்கம் இம்மாவட்டத்துக்கு இதற்கென 22,12,500 ரூபாய் ஒதுக்கியது. ஹரிஜனக் குடியிருப்புகளில் உள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு மேலும் 3 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. கிணறு வெட்டுவதற்குத் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் கிடைப்பது அரிதாக இருந்ததால் மேற்சொன்ன நிதி ஒதுக்கததில் ரூ. 3 93 லட்சத்தை கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திருப்பிக்கொடுத்துவிட்டார். எஞ்சிய தொகை பயன்படுத்தப்பட்டது. சீர்கேடான பருவ நிலையினால் பாதிக்கப்பட்ட கிணறுகளை ஆழப்படுத்தும் பணியை மேற்கொள்ளுவதற்காக, 1968-ம் ஆகஸ்டு முற்பகுதியில் கோவை மாவட்டத்திற்காக மேலும் ரூ. 4 லட்சம் ஒதுக்கப்பட்டது. கூடுதலாக நிதி ஒதுக்கவேண்டுமென்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் மீண்டும் அரசாங்கத்தை வேண்டியுள்ளார். இக் கோரிக்கையை அரசு பரிவுடன் ஆய்வுசெய்து வருகின்றது. இந்த வேண்டுகோளைக் குறித்து அரசு விரைவில் தக்க ஆணைகளைப் பிறப்பிக்கும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் கூடுதலாக நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்குள்ள கஷ்டத்தை நீக்க மாவட்ட ஆட்சித் தலைவரது கோரிக்கையை அரசாங்கம் விரைவில் ஆய்வு செய்து அவர் கோரியபடி அதிக நிதி ஒதுக்கித் தருவார்களா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஆய்வு நடைபெற்று வருகிறது. விரைவாகவே அதுபற்றி முடிவு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கிறேன்.